**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**C.C. 841/2023**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாலசுப்பிரமணியன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பூமிநாதன்** | **Calling** | : | **சார்பு ஆய்வாளர், வேடசந்தூர் காவல் நிலையம்.** |
| **Village** | : | | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **34** |
| | | | **Dated** | : | **07.04.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 12), **திரு. பாலசுப்பிரமணியன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது திண்டுக்கல், வேடசந்தூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.06.2023ம் தேதி நான் பணியில் இருந்தபோது, தலைமை காவலர் திரு. நல்லுச்சாமி அவர்கள் பணியில் இருந்தபோது, திண்டுக்கல் சிலப்பாடி, NS நகர், அபிராமிநகர் என்ற விலாசத்தைச் சேர்ந்த கல்யாணகுமார் மகள் மதுமிதா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரைப் பெற்று, திண்டுக்கல் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 332/2023, பிரிவுகள் 279, 337 இ.த.ச. ஆக வழக்கு பதிவு

செய்து, எனது பார்வைக்கு வைத்ததை நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவ இடமான திண்டுக்கல், நல்லாம்பட்டிரோடு, காவேரிநகர், சச்சின் டீக்கடை ரிலாக்ஸ் அருகே சென்று, அங்கு சம்பவ இட சாட்சிகளான நாகராஜ் மற்றும் கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகின்றன**. பின்பு சம்பவ இட சாட்சிகளான பிற சாட்சிகள் குமரேஷ், இந்தியன், சதீஷ்குமார், ஹரிபிரசாத் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்நிலையில் இவ்வழக்கில் காயம்பட்ட திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கண்மணிராஜன் சிகிச்சை பலனின்றி 08.06.2023ம் தேதி பகல் 11.00 மணிக்கு இறந்துவிட்டதாக 13.40 மணிக்கு கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 279, 337 இ.த.ச. என்பதை 279, 304(A) இ.த.ச.வாக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தும், இவ்வழக்கு வாகனவிபத்து மரண வழக்கு என்பதால் வழக்கு விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

இந்த வழக்கு சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொல்லப்படும் நல்லுச்சாமியை நான் விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு புகாரானது

மூன்று நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் விபத்து வாகனங்கள் பற்றியோ, மற்ற தடயங்கள் பற்றியோ குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவை 5 மாதங்கள் கழித்துதான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல சொன்ன நாள், நேரத்தில் அசா. 1 புகார் மனுவினை திரு. நல்லுச்சாமி அவர்களிடம் கொடுக்கவில்லை என்றாலும், புகாரானது வழக்கிற்காக அசா. 1னிடம் இணைந்து கலந்து ஆலோசித்து உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் வழக்கு கோப்பினை ஆய்வாளர் வசம் ஒப்படைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 07.04.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.04.07 16:04:04 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.